# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 0109/2017/ந

ஆணை எண்: 123/2017

நாள்: 20/05/2017

திரு. பா. தவமணி,
3/145, சிவா விஷ்ணு நகர்,
முடிச்சூர்,
தாம்பரம், சென்னை – 600 048. - முறையீட்டு மனுதாரர்

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்),
காஞ்சிபுரம் மாவட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 05.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு 09.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு மனு எண்.0109/17 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனு தாம்பரம் நகராட்சி வாக்காளர் பட்டியல் தொடர்பான பொருள் குறித்ததாக உள்ளது. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (1)ல் வரையறுக்கப்பட்டுள்ள பொதுப் பணியாளர் என்ற வரையறைக்குள் மனுதாரர் எதிர்மனுதாரராக குறிப்பிட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) வரையறுக்கப்படவில்லை. எனவே, இச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்திட வழிவகை இல்லை. மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்ட 243K மற்றும் 243ZA ஆகிய சரத்துக்களின்படி உள்ளாட்சித் தேர்தல் மற்றும் வாக்காளர் பட்டியல்

தயாரித்தல் பணி மாநிலத் தேர்தல் ஆணைய கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் வரம்பிற்குட்பட்டதாகும்.

எனவே, விரும்பும்பட்சத்தில் மாநிலத் தேர்தல் ஆணையத்தை அணுகி பரிகாரம் தேடிக் கொள்ளலாமெனத் தெரிவித்து இம்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. இம்மனு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்கிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. பா. தவமணி,
3/146, சிவா விஷ்ணு நகர்,
முடிச்சூர், தாம்பரம்,
சென்னை – 600 048.

2. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
உள்ளாட்சி தேர்தல், (வளர்ச்சி பிரிவு),
மாவட்ட ஆட்சியரகம், காஞ்சிபுரம் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
தாம்பரம் நகராட்சி,
தாம்பரம், சென்னை.

4. செயலாளர்,
தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்,
அரும்பாக்கம், சென்னை – 600 106.